விருதுநகர் மாவட்டம் , அருப்புக்கோட்டை ஊராட்சி ஒன்றியம் , பந்தல்குடி ஊராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தின் கீழ் , நடைபெற்ற சிறப்பு முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.என்.ஓ.சுகபுத்ரா , தலைமையில் , வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து குடும்ப அட்டை வேண்டி விண்ணப்பித்த பயனாளிகளுக்கு குடும்ப அட்டை நகலினையும் , பட்டா வேண்டி மனு அளித்து , தீர்வு பெற்றவர்களுக்கு பட்டா உத்தரவுகளையும் , மின் இணைப்பில் பெயர் மாற்றம் வேண்டி விண்ணப்பித்த மனுதாரரின் மனுவை உடனடியாக பரிசீலனை செய்து மின் இணைப்பு பெயர் மாற்றம் செய்த நகலினையும் மற்றும் நலத்திட்ட உதவிகளையும் வழங்கினார் . உடன் தலைமை செயற்குழு உறுப்பினர் சாகுல் ஹமீது, ஒன்றிய செயலாளர்கள் பாலகணேஷன், பொன்ராஜ் ஆகியோர் இருந்தனர்.

சட்டமன்றத் தேர்தல் நெருங்குவதால் நிதியை குறைத்த ஒன்றிய அரசு!

அமைச்சர் இ.பெரியசாமி குற்றச்சாட்டு!

திண்டுக்கல், செப்.22

சட்டமன்றத் தேர்தல் வருவதால் தமிழகத்துக்கு நிதி தராமல் ஒன்றிய அரசு புறக்கணிக்கிறது என்று அமைச்சர் இ.பெரியசாமி குற்றம்சாட்டினார்.

திண்டுக்கல் கிழக்கு மாவட்ட கழகத்தின் சார்பில் 'ஓரணியில் தமிழ்நாடு' தீர்மான ஏற்பு பொதுக் கூட்டம், திண்டுக்கல் தோமையார்புரத்தில் நடைபெற்றது. கிழக்கு மாவட்ட செயலாளர் இ.பெ.செந்தில்குமார் எம்.எல்.ஏ. தலைமை தாங்கி பேசினார். முன்னாள் அமைச்சர் கழக உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினர் பொன் முத்துராமலிங்கம் சிறப்பு உரையாற்றினார் .மாநகர செயலாளரும், துணை மேயருமான ராஜப்பா வரவேற்றார். கழக துணை பொதுச் செயலாளரும், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சருமான இ.பெரியசாமி, சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு பேசியதாவது:

2026 சட்டமன்ற தேர்தலில் கழகம் பெறப்போகும் மகத்தான வெற்றியை, இனிமேல் யாரும் பெற முடியாதவாறு அமைய வேண்டும். இதற்காக தி.மு.க.வின் 4 ஆண்டு கால ஆட்சியின் சாதனைகளை மக்களிடம் கூறி வாக்குகளை சேகரிக்க வேண்டும்.

.கழகத்தின் மீது வழக்குகளை போட்டு அடக்கி, ஒடுக்கி விடலாம் என்று மத்திய அரசு நினைக்கிறது. கழகத் தலைவர் மீண்டும் முதல்அமைச்சர் ஆட்சியில் அமர்வதை யாராலும் தடுக்க முடியாது. தமிழகத்துக்கு தரவேண்டிய ரூ.2 ஆயிரம் கோடியை மத்திய அரசு தரவில்லை.

கடந்த ஆண்டு 4 மாதங்களாக 100 நாள் வேலை திட்ட நிதி தரவில்லை. மேலும் தி.மு.க. ஆட்சிக்கு வந்ததும் 41 கோடி வேலை நாட்களுக்கு மத்திய அரசு பணம் கொடுத்தது. பின்னர் 31 கோடி வேலை நாட்களாக குறைத்தது. தற்போது 12 கோடி வேலை நாட்கள் என்று கூறிவிட்டது. சட்டமன்ற தேர்தல் வருவதால் வேலை நாட்களை குறைத்து

தமிழக முதல் அமைச்சர் கைவிரலை நீட்டினால் அனைத்து மாநிலங்களும் அணிவகுக்கும். 2026சட்டமன்றதேர்தல், 2029 நாடாளுமன்ற தேர்தலில் பெறும் வெற்றியால் முதல் அமைச்சரின் கைவசம் இந்தியா வரும். 2026ல் மீண்டும் மு.க.ஸ்டாலின் முதல் அமைச்சராவார். இந்த இயக்கத்தைகாக்க முதல்அமைச்சரும், துணை முதல் அமைச்சரும் வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

இதையடுத்து 60 வாக்குச் சாவடி முகவர்களுக்கு பரிசு வழங்கப்பட்டது.

மாவட்ட கழக நிர்வாகிகள் காமாட்சி, நாகராஜன், பிலால்,மார்கிரேட் மேரி, சத்தியமூர்த்தி, மேயர் இளமதி, ஒன்றிய செயலாளர் வெள்ளிமலை, நெடுஞ்செழியன், ஜெயராமன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தொகுதி தேர்தல் பொறுப்பாளர்கள் பாசப்பிரபு, பாண்டியன், வழக்கறிஞர் செல்வக்குமார், கள்ளிப்பட்டி மணி,

ஒன்றிய செயலாளர்கள் சிவகுருசாமி,ராமன் முருகேசன்,மணி, வழக்கறிஞர் நிலக்கோட்டை மணிகண்டன், முருகன் , சௌந்தரபாண்டியன், கருமலை பாண்டியன், கரிகால பாண்டியன், அய்யப்பன் ,பழநி சௌந்தரபாண்டியன், சாமிநாதன், தலைமை செயற்குழு உறுப்பினர் நடராஜன், தண்டபாணி, கனகதுரை, தமிழ் மணி, பொதுக்குழு உறுப்பினர்கள் அக்பர், கலைராஜா, சுப்ரமணி, மூர்த்தி, சுப்புலட்சுமி, மாநகர நிர்வாகிகள் முகமது இப்ராகிம், அழகர்சாமி, பொருளாளர் மீடியா சரவணன், பகுதி கழக பொறுப்பாளர்கள் சந்தோஷ், ஜானகிராமன், ராஜேந்திரன், சந்திரசேகர், சூசைராபர்ட், பஜ்லுல்ஹக், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கணேசன், மாணவரணி அமைப்பாளர் அஸ்வின் பிரபாகரன், மருத்துவரணி அமைப்பாளர் அமிர்தகடேஸ்வரர், இலக்கிய அணி முருகானந்தம், விவசாய அணி கண்ணன், வழக்கறிஞர் அணி அமைப்பாளர் சுரேஷ் குமார், மாநகராட்சி மண்டல தலைவர்கள் ஜான்பீட்டர், ஆனந்த், மாமன்ற உறுப்பினர்கள், சார்பு அணி நிர்வாகிகள் உள்ளிட்ட நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

விளாத்திகுளம் பேரூராட்சிக்குட்பட்ட அரசு பொதுமயானத்தில் விளாத்திகுளம் பேரூராட்சி நிர்வாகம், ரவிராஜ் ஜுவல்லர்ஸ், மரங்கள் மக்கள் இயக்கம் இணைந்து சுமார் 150 மரக்கன்றுகள் நடும் பணியினை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜீ.வி.மார்கண்டேயன் துவக்கி வைத்தார். நிகழ்வில் விளாத்திகுளம் பேரூராட்சி செயல் அலுவலர் சுப்பிரமணியன், மரங்கள் மக்கள் இயக்கம் நிர்வாக இயக்குனர் ராகவன் ரவிராஜ் ஜுவல்லர்ஸ் ரவி, விளாத்திகுளம் பேரூராட்சி மன்ற தலைவர் சூர்யாஅய்யன்ராஜ், விளாத்திகுளம் ஒன்றிய செயலாளர்கள் அன்புராஜன், இம்மானுவேல் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

ஆயிரம்விளக்கு மு. நடராசன்
செப்டம்பர் 22 (2004)

இளமைப் பருவத்திலேயே கழகத்தில் இணைந்து பணியாற்றியவர்.

ஆயிரம்விளக்கு பகுதியில் இருபத்தைந்து ஆண்டுகள் வட்டக் கழகச் செயலாளராகவும், பத்து ஆண்டுகள் பகுதிக் கழகச் செயலாளராகவும், மத்திய சென்னை மாவட்ட துணைச் செயலாளராகவும், தென்சென்னை மாவட்டப் பொருளாளராகவும் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

சென்னை மாநகராட்சி 110வது வார்டு கவுன்சிலராக இருமுறையும், மண்டலக்குழுத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு, அப்பகுதி மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை செய்து கொடுத்து, அவர்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

இவரது பணியினை பாராட்டும் வகையில் தலைவர் கலைஞர் அவர்களிடம் இருமுறை கணையாழி பெற்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

தூத்துக்குடி பழைய பேருந்து நிலையத்தில் வைத்து ஆட்சியர் அலுவலகம் முதல் சுனாமி காலனி வரையிலான புதிய மினி பேருந்து வழித்தடத்தில் மினி பேருந்துகளை சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை துறை அமைச்சர் பெ. கீதாஜீவன் துவக்கி வைத்தார். இதில் மேயர் ஜெகன் பெரியசாமி, மாநகர செயலாளர் ஆனந்த சேகரன், மாவட்ட துணை செயலாளர் ராஜ்மோகன் செல்வின், மாமன்ற உறுப்பினர் கீதா முருகேசன், பகுதி செயலாளர் ரவீந்திரன், அதிர்ஷ்டமணி மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

விழுப்புரம் மாவட்டம் – அய்யூர் அகரம் பாலம் அருகில்

சாலை விபத்தில் உயிரிழந்தவர்கள் குடும்பத்திற்கு ரூ.3 லட்சம் நிதி!

காயமடைந்தவர்களுக்கு நிதி! முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, செப். 22 -

விழுப்புரம் மாவட்டம், சென்னை - திருச்சி தேசிய நெடுஞ்சாலை, அய்யூர் அகரம் பாலம் அருகில் நிகழ்ந்த சாலை விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தி னருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி -

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பு வருமாறு:-

சென்னையில் நேற்று முன்தினம் (20.9.2025) நடைபெற்ற ஆசிரியர்களுக்கான நுழைவுநிலைப் பயிற்சியில் கலந்துகொள்வதற்காக நான்கு அரசுப் பள்ளி ஆசிரியைகள் தங்கள் கணவர்களுடன் சென்னைக்கு காரில் சென்று கொண்டிருந்தபோது அவர்களில் ஒருவரான திருமதி.சிவரஞ்சனி (வயது 38) க/பெ. ஜெகதீசன் மற்றொரு ஆசிரியை திருமதி. மெஹருன்னிஷா அவர்களின் கணவர் திரு.ஷாகுல் அமீது ஆகிய இருவரும் அதிகாலை சுமார் 05.00 மணியளவில் விழுப்புரம் மாவட்டத்திலுள்ள அய்யூர் அகரம் பாலம் அருகில் எதிர்பாராதவிதமாக எதிரே வந்த டேங்கர் லாரி ஒன்றின் மீது மோதியதில் பலத்த காயமடைந்த இருவரும் சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்தனர் என்ற செய்தியைக் கேட்டு மிகவும் அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இந்த விபத்தில் காயமடைந்து முண்டியம்பாக்கம் அரசு விழுப்புரம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் திருமதி.மெஹருன்னிஷா, திருமதி.பூவிழி, திருமதி.கௌசல்யா, திரு.பிரகாஷ், திரு.முருகன் மற்றும் திரு.சூரியா ஆகிய ஆறு நபர்களுக்கு சிறப்பு சிகிச்சை அளிக்கவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தி னருக்கும், அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா மூன்று இலட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்த மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்குத் தலா ஒரு இலட்சம் ரூபாயும், இலேசான காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்குத் தலா ஐம்பதாயிரம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதி யிலிருந்து வழங்கிடவும் த்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார்.

வே.ஜெயபாலன் தலைமை!

தென்காசியில் 'ஓரணியில் தமிழ்நாடு' மாபெரும் பொதுக்கூட்டம்!

திண்டுக்கல் லியோனி சிறப்புரை!

தென்காசி.செப்.22–

தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டேன் 'ஓரணியில் தமிழ்நாடு' தீர்மான ஏற்பு மாபெரும் பொதுக்கூட்டம் இலஞ்சியில் தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன் தலைமையில் மாவட்ட துணை செயலாளர்கள் கனிமொழி, கென்னடி, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் செல்லத்துரை, ஆறுமுகச்சாமி, பொதுக்குழு உறுப்பினர்கள் சேசுராஜன்,ரஹீம், இராஜேஸ்வரன்,சாமித்துரை, இலஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் சின்னத்தாய் சண்முகநாதன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.பேரூர் செயலாளர் முத்தையா வரவேற்றார்.ஒன்றிய செயலாளர் அழகு சுந்தரம் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கி னார்.

இந்நிகழ்வில் கழக கொள்கை பரப்பு செயலாளரும்,தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக வாரியதலைவருமான திண்டுக்கல் ஐ.லியோனி பங்கேற்று பேசியதாவது.

பிரதமர் நரேந்திர மோடி தமிழகம் வரும் போதெல்லாம் நான் ஒரு திருக்குறள் கூறுகிறேன் என கூறுவதையும் பாரதியார் கவிதைகளை கூறுகிறேன் என கூறுவதையும் தனது நகைச்சுவை பாணியில் பேசினார். சமஸ்கிருதத்தையும்,ஹிந்தியையும் கொண்டு வந்து தமிழுக்கு மட்டுமல்லாமல் இந்தியா முழுவதும் உள்ள அவரவர் தாய் மொழிக்கு பிரதமர் மோடி செய்யும் துரோகத்தை படம் பிடித்து காட்டுகிற தேசிய தலைவராக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் விளங்கி வருகிறார்.ஒன்றிய பிரதமர் நரேந்திர மோடிக்கு பஜனை பாடி பகல் கனவு காணும் எடப்பாடி பழனிச்சாமிக்கு சிம்ம சொப்பனமாக கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விளங்கி வருகிறார். உலக நாடுகளில் எங்கேயும் நடைபெறாத வகையில், பீகாரில் 85 லட்சம் மக்களின் வாக்குரிமையை பறித்து வாக்கு திருட்டு நடைபெற்றுள்ளது.இந்த சதி திட்டம் தமிழகத்தில் நடந்துவிடக் கூடாது என்று அதனை முறி யடிக்கும் வகையில் அதற்கான தயாரிப்பு பணிகளை முதல்வர் அவர்கள் தொடங்கியுள்ளார்.

வட இந்தியா மற்றும் ஒன்றிய அரசுக்கு எந்த விதத்திலும் தலை குனியவும் மாட்டேன்,அடிமையாகவும் மாட்டேன் என்று உறுதிமொழி ஏற்று தமிழக முதல்வர் அவர்கள் சிறப்பாக செயல்பட்டு வருகிறார்கள்.

இவ்வாறு திண்டுக்கல் ஐ. லியோனி பேசினார்.

முன்னதாக மாவட்ட பொறுப்பாளர் ஜெயபாலன் தலைமையில் உறுதிமொழி ஏற்பு வாசிக்கப்பட்டது.

கூட்டத்தில் மாவட்ட பொறுப்பாளர் ஜெயபாலன்,மாநில சுற்றுசூழல் அணி தலைவர் பூங்கோதை ஆலடி அருணா,மாநில விவசாய அணி இணை செயலாளர் ஆனைகுளம் அப்துல் காதர்,மாநில மருத்துவ அணி இணைசெயலாளர் டாக்டர் கலை கதிரவன் ஆகியோர் பேசினர்.

கூட்டத்தில் ஒன்றிய செயலாளர்கள் வல்லம் திவான் ஒலி,சிவன் பாண்டியன்,செல்லத்துரை, சமுத்திரபாண்டியன்,மகேஷ் மாயவன்,ஜெயக்குமார், வக்கீல் சிவக்குமார், பொன்செல்வன், ரமேஷ், வீராணம் ஷேக்முகமது, ஜெயா, சுரேஷ், சொக்கம்பட்டி மணிகண்டன், பேச்சாளர்கள் வேங்கை சந்திரசேகர், கடையநல்லூர் இஸ்மாயில், வெல்டிங் மாரியப்பன், ஆயிரப்பேரி முத்துவேல்,நகர செயலாளர்கள் சாதிர்,வெங்கடேசன், அப்பாஸ், பீரப்பா, கணேசன்,பேரூர் செயலாளர்கள் மேலகரம் சுடலை, குற்றாலம் குட்டி, பண்டாரம், ராஜராஜன், ஜெகதீசன், முத்து, நெல்சன், கோபால், சிதம்பரம், தங்கப்பா, வெள்ளத்துரை, அரசு வழக்கறிஞர் வேலுச்சாமி, மாவட்ட அணி அமைப்பாளர்கள் கிருஷ்ணராஜா, முருகன்,சங்கீதா சுதாகர்,திவ்யா மணிகண்டன்,தங்கராஜ்பாண்டியன், இசக்கி பாண்டியன், கோமதிநாயகம், வளன் அரசு, இஞ்சி இஸ்மாயில், முத்துராமலிங்கம்,அழகு தமிழ் சங்கர்,மாவட்ட அணி துணை அமைப்பாளர்கள் ஐவேந்திரன் தினேஷ், சுப்பிரமணியன், கிருஷ்ணராஜ், சண்முகநாதன், தங்கபாண்டியன், ஜீவானந்தம், காளிராஜ்,கரிசல் வேல்சாமி, கருப்பணன், ராமராஜ், ஊர் மேலழகியான் சுப்பிர மணியன், ராஜேந்திரன் வக்கீல் ரகுமான் சாதத், சபரி சங்கர்,ஷேக்பரீத், தென்காசி ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் யூனியன் வல்லம் ஷேக் அப்துல்லா, துணைத்தலைவர் கனகராஜ், கடையநல்லூர் நகர் மன்ற தலைவர் மூப்பன் ஹபீபூர் ரஹ்மான், நகர இளைஞரணி யாசின்,ஒன்றிய இளை ஞரணி கொக்கி குமார், முத்துக்குமார், அரபாத்,இசக்கிரவி, ஒன்றிய துணை செயலாளர் ஆனந்தன்,இலஞ்சி பேரூர் நிர்வாகிகள் ராமச்சந்திரன், மாரிராஜ், நவநீதகிருஷ்ணன், இசக்கியம்மாள்,சுடலையாண்டி, ஜெயக்குமார் பாண்டியன், சுப்பிரமணியன், கணேசமூர்த்தி, தேவி சிவகுமார்.மகேஸ்வரன், ராஜேந்திரன்,பூதத்தான்,குருவி, அங்கப்பன், ராஜ், சேதுசங்கர்,மருது, வசந்த், ஆறுமுகம், கணேசன், அழகுதுரை, நித்தியா,சாம்பமூர்த்தி, ராஜேஸ்வரன், அறங்காவலர் பூவையா,கதிரவன்,இசக்கியம்மாள், பாக முகவர்கள் பெருமாள், இசக்கி, ராமசுப்பிரமணியன்,காளிராஜ், நகர இளைஞரணி அமைப்பாளர் கார்த்திக்,துணை அமைப்பாளர்கள் பாலகிருஷ்ணன், யோகேஷ், சண்முகம்,கிருஷ்ணமூர்த்தி உட்பட கழகத்தினர்,பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சி நிறைவில் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் சுப்பிரமணியன் நன்றியுரையாற்றினார்.

கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியரக வளாகத்தில் தூய்மை இயக்கம் 2.0 திட்டத்தின்கீழ் அலுவலகம் மற்றும் அதன் சுற்றுப்புறத்தை தூய்மையாக வைத்திருப்பதற்கான தூய்மை உறுதிமொழியினை மாவட்ட வருவாய் அலுவலர் ரா.ஜீவா தலைமையில், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க.கார்த்திகேயன், சங்கராபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் தா.உதயசூரியன் ஆகியோர் முன்னிலையில் அனைத்து அரசு அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் ஏற்றுக் கொண்டனர், இந்நிகழ்வில் மாவட்ட ஊராட்சிக் குழுத்தலைவர் இரா.புவனேஷ்வரி பெருமாள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் கி.ரமேஷ்குமார், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) ம. தனலட்சுமி, தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) சுமதி, நகர்மன்ற தலைவர் ஆர்.சுப்ராயலு, ஒன்றிய குழு தலைவர்கள் சத்தியமூர்த்தி, அலமேலு ஆறுமுகம் மற்றும் பலர் உள்ளனர்.